நாஞ்சில் பகுதியில் தி. மு. க. மறியல்

REGD. No. M. 6311 PHONE No. 55630

நம் நாடு

The "Nam Nadu": A Tamil Daily. ★ The Official Organ Of The D.P.F

தனி இதழ்: ஒரு அணா | சென்னை: ஆடி மீ 22உ வெள்ளி (6—8—54) | மலர்: 2
இலங்கையில் 10 சதம் | வெளியூர்: ஆடி மீ 23உ சனி (7—8—54) | இதழ்: 46

நீதிமன்றங்களின் முன்பு நடைபெறுகிறது!

கழக முன்னணி வீரர்கள் களம் சென்றுள்ளனர்

அமைதியுடனும் கண்ணியத்துடனும் அறப்போர் நடைபெறுகிறது

தோழர் ஜான் அறிவிப்பு

திருவாங்கூர் தமிழர் அறப்போரில் இன்று தி. மு. கழகம் பங்கேற்று விட்டது. செங்கோட்டை, நாகர்கோவில் ஆகிய இடங்களில் நீதிமன்றங்களின் முன்பு இன்று ஒருநாள் மட்டும் திராவிட முன்னேற்றக் கழகத்தினர் அடையாள மறியல் செய்கிறார்கள். தி. மு. க. தொண்டர்கள் பேரார்வத்துடன் அறப்போரில் பங்கு கொண்டு விட்டனர். செங்கோட்டையில் 25 தி. மு. கழகத் தொண்டர்கள் மறியலில் கலந்து கொள்ளுகிறார்கள்.

ஆத்தூக்குடி தோழர் என். நடராசன் மறியலைத் தலைமை வகிக்க செங்கோட்டை சென்றிருக்கிறார். மதுரை தோழர் என். முத்து நாகர்கோவில் சென்றிருக்கிறார். தோழர்கள் இரெ. இளம்வழுதி, இரா. சு. தங்கப்பனும் ஆகியோரும் நாகர்கோவில் சென்றுள்ளதாகத் தெரிகிறது.

அறப்போரில் கலந்துகொண்டு திராவிட முன்னேற்றக் கழகத் தோழர்கள் இன்று அடையாள மறியல் செய்கிறார்கள் என்பதையும், மறியல் மிகவும் அமைதியான முறையிலும், ஒழுங்குடனும் நடைபெறும் என்பதையும் திரு—கொச்சி சர்க்காருக்கும், நாகர்கோவில் மாவட்ட நீதிபதிக்கும், போலீஸ் அதிகாரிகளுக்கும் முன்கூட்டியே அறிவித்துவிட்டதாக தோழர் ஜான் அவர்கள் தெரிவிக்கிறார்.

★

'விடுதலை நாள்'

திரு—கொச்சி தமிழர்கள் ஆகஸ்டு 11-ம் தேதியன்று விமோசன தினம் கொண்டாடுவது என்று முடிவு செய்தனர் என்று தெரிகிறது. 9-ம் தேதியன்று நடக்கவிருந்த இந்த விமோசன தினம் சரியான ஏற்பாடுகளைச் செய்யும் பொருட்டு இரண்டு தினங்கள் ஒத்திவைக்கப்பட்டது என்று தோழர் குஞ்சன் நாடார் கூறியுள்ளார்.

★

கரையாளருக்குச் சிறை

செங்கோட்டை தாலூகா அலுவலகத்தின் முன்னர் மறியல் செய்த சட்டசபை உறுப்பினர் கே. சட்டநாதக் கரையாளருக்கும், முன்னாள் சட்டசபை உறுப்பினரான ஏ. ஆர். கரையாளருக்கும் ஆறு வார சிறைத் தண்டனையும், ரூ. 50 அபராதமும், அபராதம் கட்டத் தவறினால் மேலும் ஒரு வார சிறைத் தண்டனையும் அளிக்கப்பட்டதாகத் தெரிகிறது.

* * *

நாகர்கோவிலில் மறியல் செய்த 12 பேர் கைது செய்யப்பட்டனர் என்று தெரிகிறது.

புதுவைப் பகுதியில் அரசியல் புதிர்!

(:)

பாரிசில் பேச்சுவார்த்தை ஆரம்பம்

வெளியேறும் செய்தி—கைகூடச் செய்யும் போக்கு!

பிரெஞ்சிந்திய திட்டுகளின் அரசியல் நிலையில் புதிரான போக்கும் மாறுபட்ட கருத்துக்களும் நிலவுகின்றன! இன்னதென்று நிச்சயமாக்க முடியாத சூழ்நிலை நிலவுகிறது.

பிரெஞ்சிந்தியப் பகுதிகளின் எதிர்காலம் பற்றி இந்தியா—பிரான்ஸ் சர்க்கார்களுக்கிடையே பேச்சு வார்த்தைகள் மீண்டும் ஆரம்பமாகி விட்டன என்று தெரிகிறது.

சின்னாட்களுக்கு முன்னர் ஆரம்பமான பேச்சு வார்த்தைகள் முறிந்து போயின. இப்போதைய பேச்சு வார்த்தைகள் விரைவில் முடிவடையுமென்று தெரிகிறது.

இதற்கிடையில் பிரெஞ்சு அதிகாரிகள் பொறுப்பை இந்திய சர்க்காரிடம் ஒப்படைக்காமல் திடீரென வெளியேறி விட்டால் என்ன செய்வது என்பது பற்றி புதுவை அரசியல் வாதிகள் ஆலோசனை செய்து வருகிறார்களாம்!

புது இயக்கம்

இந்திய சர்க்காருக்குத்தான் அதிகாரத்தை மாற்ற வேண்டுமென்றும், எந்த உள்ளூர் அரசியல் வாதிகளிடமும் அதிகாரத்தை ஒப்படைக்கக் கூடாதென்றும் கூறும் நான்கு பெரும் ஊர்வலங்கள் புதுவையில் நடைபெற்றனவாம்.

புதுவை போலீசாரின் போக்கில் மாற்றம் காணப்படுகிறதென்றும், தொண்டர்களை அடிக்கும் வழக்கத்தைக் கைவிட்டு விட்டனர் என்றும் தெரிகிறது.

ஆனால் காரைக்காலில் நடைபெற்ற இணைப்புக் கூட்டத்தில் ஐக்கிய முன்னணியின் செயலாளர் பியான் என்பவர் உள்பட 150 பேர் போலீஸ் ஸ்டேஷனுக்கு அழைத்துச் செல்லப்பட்டனர் என்று தெரிகிறது.

புதுவையின் ஜனநாயகக் கட்சியைச் சேர்ந்த 20 தொண்டர்கள் ஊர்வலமாகச் சென்றபோது கைது செய்யப்பட்டனராம்.

வெளியேற்றம்

அதிகார மாற்றத்திற்கான திட்டத்தை, பிரான்ஸ் அநேகமாக பூர்த்தி செய்து விட்டதென்றும், இந்திய சர்க்காரின் சம்மதம்தான் கிடைக்க வேண்டும் என்றும் ஒரு பிரெஞ்சு அதிகாரி தெரிவித்துள்ளார்.

புதுவையில் உள்ள இந்தியத் தூதுவர் கேவல் சிங் டில்லி சென்றது இந்தியா-பிரெஞ்சு பேச்சுகளில் எழுந்த அம்சங்கள் பற்றி ஆலோசனை கேட்கவே என்று பலர் நம்புகின்றனர்.

அறிவிப்பு

பிரெஞ்சிந்திய அதிகாரிகள் தம் குடும்பங்களை அனுப்புவதற்காக அவசரமாக ஏற்பாடுகள் செய்கின்றனர்! ஆகஸ்டு 8-ம் தேதிக்கு முன்னர் பாரிசிலிருந்து ஒரு முக்கியமான அறிவிப்பை அவர்கள் எதிர்பார்க்கிறார்கள்.

பாரிசில் வெளியான செய்தி

மாஸ்கோ மணம்!

"மக்களிடையே, விரிவான, தொடர்ந்ததொரு நாஸ்திகப் பிரச்சாரத்தைச் செய்ய முன்வர வேண்டுகிறோம்."

"மத மாச்சரியங்கள் மக்களின் மனதில் நஞ்சூட்டுகின்றன! இது கம்யூனிச சமுதாயத்தை அமைப்பதில் அவர்களுக்குள்ள தீவிரமான பங்கைத் தடுக்கும் ஆபத்தானதொரு தடைக் கல்லாகும்,"

என்று "ட்ரட்" என்ற சோவியத் நாட்டு தொழிற்சங்கப் பத்திரிகை குறிப்பிட்டிருக்கிறது.

மேலும் அதில் கண்டிருப்பதாவது:—

"மத சம்பந்தமான விடுமுறை நாட்களில் தொழிலாளர்களும் அலுவலாளர்களும், தொழிற்சாலைகளுக்கும், அலுவலகங்களுக்கும் செல்லாது மது வருந்தக் களியாட்டமாவதில் மனதைச் செலுத்தி வருகிறார்கள் என்பதும் கண்கூடு!"

ஜூன், ஆகஸ்டு 14-ம் தேதிக்குள் இரு சர்க்கார்களுக்கிடையே ஒப்பந்தம் ஏற்படலாம் என்று தெரிகிறது.

எண்ணெய்க் கிணறுகள் சர்க்கார் உடைமையாகின்றன

ஆங்கிலேயர் ஆதிக்கம் மறைகிறது!

ஈரானில் ஒப்பந்தம் ஏற்பட்டது: மத்திய கிழக்கு நெருக்கடி குறைகிறது!

டெஹ்ரான், ஆக. 5—

ஈரான் சர்க்காருக்கும்—எட்டு எண்ணெய் கம்பெனிகளுக்குமிடையே எண்ணெய்ப் பிரச்னையில் ஒப்பந்தம் ஏற்பட்டுவிட்டது.

எட்டு வெளிநாட்டுக் கம்பெனிகள் ஒன்றுகக் கூட்டு சேர்ந்து புதிய அமைப்பு ஒன்றை ஏற்படுத்தி பெரும் அளவில் எண்ணெய் உற்பத்தி செய்வார்கள். இக்கம்பெனி ஈரானில் பதிவு செய்யப்படும். இக்கம்பெனியில் இருவர், சர்க்கார் சார்பிலும், ஐவர், கூட்டுக் கம்பெனியின் சார்பிலும் ஆக ஏழு டைரக்டர்கள் இருப்பர்.

ஆங்கிலோ—ஈரான் எண்ணெய் கம்பெனிக்கு 2½ கோடி ஸ்டர்லிங் நஷ்டஈடு கொடுக்கப்படுமென்று தெரிகிறது.

உலக மார்க்கெட்டுக்கு மீண்டும் எண்ணெய் போக ஒப்பந்தத்தில் ஏற்பாடு செய்யப்பட்டிருக்கிறதாம். இன்னும் இரண்டு மாதங்களில் ஈரான் எண்ணெய்க் கிணறுகளில் வேலை துவங்குமென்று தெரிகிறது.

இந்த ஒப்பந்தத்தினால் மத்திய கிழக்கில் உள்ள நெருக்கடி குறைகிறது. என்று பிரிட்டிஷ் அபிப்ராயக்காரர்கள் கூறுகின்றனர்.

இந்த ஒப்பந்தம் 25 ஆண்டு காலத்திற்கு ஏற்பட்டுள்ளது. மீண்டும் அது பதினைந்து ஆண்டு காலத்திற்கு நீடிக்க வசதி செய்யப்பட்டுள்ளது.

எண்ணெய்க் கிணறுகளில் முதல் ஆண்டில் ஈரான் சர்க்காருக்கு 31 மில்லியன் ஸ்டர்லிங் கிடைக்குமென்றும், மூன்றாவது ஆண்டில் இந்த வருமானம் 67 மில்லியன் ஸ்டர்லிங்காக உயரும் என்றும் தெரிகிறது.

ஈரானின் உள்நாட்டுத் தேவைகளுக்கான எண்ணெயும், எண்ணெய்ப் பொருள்களும், உற்பத்தி விலையிலேயே ஈரான் தேசிய எண்ணெய் கம்பெனிக்கு கிடைக்குமென்று தெரிகிறது.

ஆங்கிலோ—ஈரான் எண்ணெய்க் கம்பெனிக்கு கொடுக்கப்படும் நஷ்டஈடுத் தொகையான இரண்டரை கோடி ஸ்டர்லிங்கும் 10 ஆண்டுகளில் கொடுக்கப்படுமென்றும் இதற்காக பிரிட்டன் தேவையான பொருள்களை ஏற்பாடு செய்ய ஈரான் சர்க்காருக்குச் செய்யுமென்றும் தெரிகிறது.

இந்த ஒப்பந்தத்தின் மூலம் மூன்றாண்டுகளாக நீடித்த எண்ணெய் பிரச்சினை முடிவடைந்து வருகிறது.

இந்த ஒப்பந்தம் ஏற்பட்டது பற்றி ஈரான் சர்க்காரும், ஈரானில் எண்ணெய் உற்பத்தி செய்யும் கூட்டுக் கம்பெனியும் அறிக்கை ஒன்றை வெளியிட்டுள்ளன.

கி. ஆப்பிரிக்க ஆர்ப்பாட்டம்

இந்திய சர்க்கார் எச்சரிக்கை

போர்ச்சுகீசிய கிழக்காப்பிரிக்காவின் தலைநகரான லொரான்கோமார்க்குவேயில் சென்ற வாரம் நடைபெற்ற இந்திய எதிர்ப்பு ஆர்ப்பாட்டங்கள், பலாத்கார சம்பவங்கள் பற்றி கடுமையாக ஆட்சேபம் தெரிவித்து டில்லியில் உள்ள போர்ச்சுகீசிய தூதுவராலயத்திடம் இந்திய சர்க்கார் குறிப்பு ஒன்றைத் தந்திருக்கிறது.

இந்தியாவில் இது அபாய விளைவுகளை ஏற்படுத்துமென்றும், கிழக்காப்பிரிக்காவில் உள்ள இந்தியர்களின் உயிருக்கும், உடைமைகளுக்கும் முழு பாதுகாப்புத் தர எல்லா நடவடிக்கைகளையும் எடுக்க உடனே போர்ச்சுகீசிய சர்க்கார் உத்திரவாதம் அளிக்க வேண்டுமென்றும் இந்திய சர்க்கார் எச்சரித்திருக்கிறது,

அவர்களுக்கு ஏதாவது நஷ்டமோ, சேதமோ ஏற்பட்டால் அதன் முழுப் பொறுப்பை போர்ச்சுகீசிய சர்க்கார்தான் ஏற்கவேண்டியிருக்கும் என்றும், இந்திய சர்க்கார் எச்சரித்துள்ளது,

கான்பெர்ரா:

ஆஸ்திரேலியப் பிரதம மந்திரி ராபர்ட் மென்சிஸ் ரேடியோ மூலம், ஆஸ்திரேலிய மக்களிடை பேசுகையில், ஆசிய பாதுகாப்பு ஒப்பந்தம் ஒன்றில் சேருவதற்குத் தனது அரசாங்கம் முடிவு செய்திருப்பதாக அறிவித்தார்.

நம் நாடு

தி.மு.க. தினஇதழ் ஆசிரியர்: அண்ணாதுரை

சென்னை 6—8—54 வெள்ளி

வலையில் விழ வேண்டாம்!

"சீட்டு விளையாடும்போது கை பலமாக இருக்க வேண்டும். அப்படி இல்லாமல், எந்தவித தந்திரம் செய்தாலும் எதிரியை தோற்கடிக்க முடியாது!"

இதுதான் இன்றைய சர்வதேசிய அரங்கத்தில் உச்சரிக்கப்படும் மந்திரம்!

அமெரிக்கா கூறும் வேதம்! பிரான்சும், பிரிட்டனும் நம்பும் கொள்கை!

நாள்தோறும் ரஷ்யாவின் கொள்கைவழி நடப்போர் அதிகமாகிப் போவதையும், மக்களில் பெரும்பான்மையினர் கம்யூனிச வழியில் நடக்க முனைவதைக் காணும் போதும், அமெரிக்கா தன் கையை பலப்படுத்துவது இன்னும் அவசியம் என்று எண்ணுகிறது!

சென்ற உலகப் போருக்குப் பின் கிழக்கு ஐரோப்பிய பூபாகத்தை அன்றி, ஆசியப் பகுதிகளிலும் கம்யூனிச எண்ண வளர்ச்சியும், அதன் மூலம் ரஷ்யாவின் செல்வாக்கும் வளருவதையும் கண்ட, முதலாளித்துவ சமுதாய அமைப்பையும், ஜனநாயகப் போர்வையில் ஏகாதிபத்திய கொள்கையையும் கடைபிடிக்கும் அமெரிக்காவும், அதன் தயவில் வாழ வேண்டிய நிலைக்குத் தாழ்த்தப்பட்ட மேற்கு ஐரோப்பிய வல்லரசுகளும் பீதியடைந்தன!

தங்களுடைய ஆதிபத்தியத்திற்கு சாவுமணி அடிக்கப்படுவதைக் கண்ட வெள்ளை நாடுகள், ரஷ்யாவின் செல்வாக்கைக் குறைக்க வழி தேட ஆரம்பித்தன!

ஏழை—பணக்காரன் கொண்ட சமுதாயம், கம்யூனிசத்தின் முதல் விரோதி!

கறுப்பன் — வெள்ளையன் என்ற உயர்வு-தாழ்வு கம்யூனிசம் ஒத்துக்கொள்ளாத விஷயம்!

இந்த இரண்டு அடிப்படைகளிலிருந்தான் கம்யூனிஸ்ட் நாடுகள் தோன்ற ஆரம்பித்தன!

கம்யூனிசம் பரவாமல் தடுக்கப்பட வேண்டுமென்று கூறும் அமெரிக்க—ஆங்கில வல்லரசுகள், தங்களை ஜனநாயகத்திற்கும் போராடுவோராகக் கூறிக்கொள்கின்றன!

அந்த 'ஜனநாயகம்' ஏழை—பணக்காரனையும், நிற பேதத்தையும் ஒத்துக் கொள்ளவில்லை என்றும் சொல்கின்றன.

அப்படி இவர்கள் கூறுகிற ஜனநாயகமே, இந்த அரிய கொள்கைகளைப் பரப்பினால் மக்கள் ஏன் கம்யூனிச பாதையில் போகின்றனர்?

இந்த ஆராய்ச்சியில் ஈடுபட்டு, உலகத்திற்கு தாங்கள் கூறும் ஜனநாயகமும், கம்யூனிசம் கூறும் கொள்கைகளைத்தான்; ஆகவே எங்கள் பக்கமே இருங்கள்;—என்று கூவியழைத்து தங்கள் கொள்கைக்காகத் தாங்கள் செய்யும் காரியங்களை விளக்கிக் கூறியிருக்க வேண்டும். இந்தத் தன்மையிலே நல்ல செயலாற்றி உலக மக்கள் நம்பும்படியாக செய்திருக்க வேண்டும்.

அதை விட்டுவிட்டு சீட்டு விளையாடப் போய்விட்டனர்!

'ரஷ்யாவிற்கு அதிக படைபலம் இருக்கிறது; ஆகவே நாமும் நல்லதோர் படையை உற்பத்தி செய்தால்தான், ரஷ்யாவோடு சமாதானம் பேச முடியும்,' என்று கருத ஆரம்பித்துவிட்டனர்! தரத்தில், எண்ணிக்கையில் குறைந்த படையை வைத்துக் கொண்டு நாடுகள் சமமாக வாழ முடியாது என்றனர்!

மக்கள் ஏழ்மையில் வாடினாலும் சரி; கறுப்பனுக்குக் கசையடி கொடுக்கப்பட்டாலும் சரி, எண்ணிக்கையில் ரஷ்யாவைவிட பெரியதோர் படையை உற்பத்தி செய்துவிட்டால், ரஷ்யாவின் செல்வாக்கை ஒழித்துவிடலாம் என்று திட்டமிட்டு, உலகம் பூராவும் ரஷ்யாவைச் சுற்றி, அதற்கெதிரான அணிவகுப்பைத் தயார் செய்கிறது, அமெரிக்கா!

பலமான பாதுகாப்புப் பட்டாளம், கம்யூனிசத்தையும், ரஷ்யாவையும் அதனதன் இடத்தை விட்டு நகரவிடாது என்பது அமெரிக்க-ஆங்கில ஏகாதிபத்தியவாதிகளின் எண்ணம்!

இதற்கு முதல் அத்தியாயமாகத்தான், வடக்கு அட்லாண்டிக் பாதுகாப்புச் சபை ஆரம்பிக்கப்பட்டது.

அதைத் தொடர்ந்து, ஆஸ்திரேலியா, நியூஜிலந்து, அமெரிக்கா பாதுகாவல் சபை ஆரம்பிக்கப்பட்டது.

இவைகளுக்கு வேண்டிய பணத்தில் பெரும் பகுதியும், ஆயுதங்களும், அமெரிக்கா தருகிறது. போர்ப் படை அமைக்க ஆட்களை மாத்திரம் அந்தந்த நாடுகள் கொடுத்து விடுகின்றன.

இப்படி அட்லாண்டிக்கிலும், பசிபிக் பெருங் கடலிலும் பாதுகாவல் என்ற பெயரால் பெரும் படைகளை நிறுவியபின் மத்திய கிழக்கிலும், தென் கிழக்கு ஆசியாவிலும் தன் திட்டத்தை நிறைவேற்ற நினைக்கிறது அமெரிக்கா!

அந்த எண்ணத்தை நிறைவேற்றும் பணியை ஏற்றுக் கொண்டு, தென் கிழக்காசியாவில் உள்ள பாகிஸ்தான், இந்தியா, பர்மா, சிலோன், இந்தோனேஷியா முதலிய நாடுகள் அடங்கிய 'சீட்டோ' ஸ்தாபனத்தை நிறுவ அமெரிக்காவின் தூண்டுதலின் பேரில் பிரிட்டன் முயற்சி செய்கிறது!

இதற்கு ஆரம்ப ஏற்பாடுகளை செய்ய அடுத்த மாதத்தில் ஒரு கூட்டத்தைக் கூட்ட லண்டன் மூலமாக ஆரம்ப அழைப்புகள் அனுப்பப்பட்டன!

ஆனால் இந்த அழைப்பை மறுத்ததுடன், 'சீட்டோ' பாதுகாவல் சபைத் தேவையில்லை என்று 'இந்தோனேஷியா' தெளிவாகத் தெரிவித்து விட்டது!

பாகிஸ்தான் 'இதைப்பற்றி யோசிக்கலாம்,' என்கிறது!

பர்மா பதில் கூறவில்லை!

இந்திய நிலைமையோ இன்னும் சரிவரத் தெரியவில்லை! 'சீட்டோ' வேறுவிதமாக இருந்தால் நல்லது என்று நேரு பண்டிதர் கூறினாராம்!

எது உண்மையோ நமக்குத் தெரியவில்லை. ஆனால் ஒன்று மாத்திரம் நன்றாகத் தெரிகிறது; ரஷ்யாவின் செல்வாக்கு வளருவதற்குக் காரணமும், அதனால் யாருக்கு நஷ்டம் என்பதும்!

நிற பேதத்தையும், ஆண்டான்-அடிமை முறையையும் பாதுகாக்கும் ஆங்கிலோ—அமெரிக்க வல்லரசுகள், தங்கள் ஆதிபத்தியம் நிலைக்கத்தான் அதிகமாக பாடுபடுகின்றனரே தவிர, முன்னேற்றப் பாதையில் செல்லத் தயாராயில்லை!

இந்த அடிப்படைக் கொள்கை வித்தியாசம் ஒரு புறமிருக்க, இந்த பாதுகாவல் குழுவில் சேருவது வல்லரசுகளின் போராட்டத்தில் இந்திய உபகண்டம் தானாகவே போய் கழுத்தைக் கொடுத்து வெட்டிக் கொள்வதற்கிடாகும்!

உலக அரங்கில் அவ்வப்போது முன்னேற்றத்திற்கான பிரச்னைகள் வரும்போது ரஷ்யர்களை விட வேறு யாரும் முன்னின்று அவைகளை ஆதரிப்பதில்லை.

ஆகவே, தேவையான நேரங்களில் ரஷ்யாவின் கை பலமாக இருக்க ஆவன செய்யக் கடமைப்பட்டிருக்கிறோமே தவிர, பலவீனப்படுத்த அல்ல!

மேலும் தென் கிழக்கு ஆசிய பாதுகாவல் குழு அமைக்கப்பட்டு அதில் இந்தியா சேர்ந்தால், அதன் நேரடி பலன், இதுவரை வளர்க்கப்பட்டு வந்த சோவியத்-செஞ்சீன நட்பு அறுக்கப்பட்டு விடும்! ஒரு வேளை, இந்துமகா சமுத்திரம் உலக யுத்த அரங்கமாக மாற நேரிடலாம்!

அமெரிக்கா வலை வீசுகிறது! வலையில் விழ வேண்டாம்!!

வெளிநாட்டு விவகாரத்தில் அமைதியையே நோக்கமாகக் கொண்டு பணியாற்றி வரும் நேரு பண்டிதர், இந்த மாதிரி போர்ப்படைத் திட்டங்களில் சேர மறுக்கவேண்டும். எவ்வளவு பெரிய இடங்களிலிருந்து அந்த அழைப்பு வந்தாலும் நிராகரிக்கவேண்டும். இதற்கு இந்திய உபகண்டத்து மக்கள் நிச்சயம் அவருக்கு பக்க பலமாக ஒன்றுபட்டு நிற்பார்கள்.

அறிவுப் பிரசாரம் செய்ய முன்வருக!

உலக வரலாற்றை எடுத்துச் சொல்லுக!

இளைஞர்களுக்கு அண்ணா கருத்துரை

காரைக்குடி பாண்டியன் படிப்பக ஆண்டுவிழாவில் பேச்சு

காரைக்குடி, ஆக. 5—

காரைக்குடி பாண்டியன் பகுத்தறிவு படிப்பக முதலாவது ஆண்டு விழா, 1-8-54 மாலை 4 மணிக்கு, படிப்பகத்தின் முன்பு அமைக்கப்பெற்றிருந்த பந்தலில் தோழர் அ. பொன்னம்பலனார் தலைமையில் நடைபெற்றது. படிப்பகத்தின் சார்பில், திரு. சுப. சிவஞானம் எல்லோரையும் வரவேற்றார்.

தலைவர் பேசுகையில் குறிப்பிட்டதாவது:—

"சமுதாயச் சீர்திருத்தத்திற்கு அரும்பாடுபட்ட பாண்டியன் பெயரால் பகுத்தறிவுப் படிப்பகம் தொடங்கி, அதுவும் கடந்த ஓராண்டாக நல்ல பல பணிகள் புரிந்திருப்பது பாராட்டுதலுக்குரியது. ஆண்டு தோறும் பாரதி விழா கொண்டாடிவிட்டு பின்னர் அவரது கொள்கைகளை மறந்து விடுவதுபோல் இல்லாமல், நல்லதொரு பெயரில் படிப்பகத்தின் மூலம் அருமையான பணிகள் புரிந்துவரும் இளைஞர்களைப் பாராட்டுவதுடன் இன்னும் அவர்கள் அரிய பணிகள் பல செய்துவர வேண்டுமென்றும் கூறினார்.

படிப்பகத்தின் முதலாவது ஆண்டு அறிக்கையைத் திரு சுப. சிவஞானம் வாசித்தார்.

பின்னர், பொதுச் செயலாளர் அண்ணாதுரை அவர்கள் பேசியதாவது:—

"பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகம் கடந்த ஓராண்டுகாலமாக அரிய தொண்டுகள் செய்து இன்று அதனுடைய முதலாவது ஆண்டு விழாவைக் கொண்டாடுகிறது. இளைஞர்கள் பலர் ஒன்று சேர்ந்து இம்மாதிரி நல்ல பணி செய்து வருவதற்காக நாம் அவர்களைப் பாராட்ட வேண்டும்.

இந்தப் படிப்பகம், சமுதாய வாழ்வில், அதன் சீர்திருத்தத்திற்காக அரும்பெரும் பணியாற்றிய சௌந்திர பாண்டியன் பெயரில் ஏற்பட்டிருக்கிறது. அவரது பெயரால் ஏற்பட்ட இந்தப் படிப்பகம், அவரது சிறந்த பண்புகளைப் பரப்ப வேண்டும்; அடுத்த ஆண்டு விழாக் கொண்டாடும் காலத்திற்குள் இன்னும் நல்ல பல பணிகளை, குறிப்பாக ஆக்கவேலைகளில் அவர்கள் செய்துவர வேண்டும்; இன்னும் ஏராளமான தோழர்கள் இதில் ஈடுபட்டு நல்லபல செயல்களைச் செய்வதுடன், அதன் மூலம் தங்கள் கழகத்திற்கும், சமுதாயத்திற்கும் நல்ல பெயர் தேடித்தர வேண்டும்; நாட்டில் இம்மாதிரிப் படிப்பகங்கள் பல தோன்ற வேண்டும்; இவைகளினால் நாம் ஏராளமான ஆக்க வேலைகளைச் செய்ய முடியும்.

இன்று நம் நாட்டில் கல்வியறிவுள்ளோர் தொகை மிகவும் குறைவு நூற்றுக்குப் பதின்மூன்று பேருக்கு மேல் கல்வி கற்றவர்கள் கிடையாது. இது காங்கிரஸ் அரசாங்கமே மறுக்க முடியாத உண்மை; புராணங்களை சொல்லலாம்; ஏடுகள் படிக்கலாம்; ஆண்டவன் கதா காலட்சேபங்கள் நடத்தலாம்; ஆனாலும், நம் நாட்டில் கல்வியறிவற்றவர்களின் தொகையை இதன் மூலம் மறைத்துவிட முடியுமா?

ஆனால் நாட்டில் கல்வியறிவு இல்லாவிட்டாலும் பொது அறிவு அதிகம் என்கிறார்கள். இது எவ்வாறு ஏற்பட்டது? இன்று நம் நாட்டில் பல அரசியல் கட்சிகள், மக்களைத் தட்டிக் கொடுத்தும் புகழ்ந்து பேசி, அவர்கள் ஆதரவைத் தேடுகின்றன; அதன் மூலம் ஓட்டுகள் பெறுகின்றன; ஆனால் திராவிட முன்னேற்றக் கழகமோ, நாட்டில் மக்களிடம் அவர்கள் மூடநம்பிக்கையை ஒழிக்க, அறியாமையைப் போக்கப் பாடுபடுகிறது. அதனால் எங்களுக்கு ஆதரவு அதிகமில்லாதிருந்தது.

இன்று, மக்கள், சமுதாய சீர்திருத்தம்பற்றிய அவசியத்தை உணர்ந்துவிட்டார்கள் அதனால் மூடநம்பிக்கைகளை வெறுக்கவும் செய்கிறார்கள்.

இவ்வாறு எங்கள் கொள்கைகள் இன்று மக்களிடையே தவிர்க்க முடியாததொன்றாகி விட்டது; அவ்வளவு தூரம் வளர்ந்துவிட்டது.

உதாரணம் சொல்லவேண்டுமானால், வழக்கமாக விபூதியணியும் பைந்தீர் ஒருவர் விபூதியணியாமல் வெளியில் சென்றால், 'நீர் என்ன திராவிட முன்னேற்றக் கழகத்தில் சேர்ந்துவிட்டீரா?' என்று கேட்கும் நிலை ஏற்பட்டு விட்டது. மடாதிபதிகள் முதல் காவி கட்டிய பண்டாரம்வரை சீர்திருத்தவாதிகள் என்று கூறும் காலமாகிவிட்டது. கல்விக்கே கடவுள் உள்ள நம் நாட்டில், பக்தர்கள், கல்விக் கடவுளான சரஸ்வதியை, 'வெள்ளைக் கலையுடுத்த பவள்' என்று புகழ்வதைப் போல, மக்களும் வெள்ளையாகவே இருந்து வருகிறார்கள்.

இந்த நிலை மாற வேண்டும்; இளைஞர்கள், நாட்டில் கல்வியறிவற்றவர்களை கல்வி கற்கும்படி செய்ய வேண்டும்; தொழில் காரணமாகப் படிப்பை விட்டவர்களுக்கு நல்ல கருத்துக்களைச் சொல்ல வேண்டும்; தற்குறி நிலையைப் போக்க வேண்டும்; இன்று நாட்டில் மக்களிடையே உலவிவரும் தவறான கருத்தைப் போக்க இளைஞர்கள் முன்வர வேண்டும்.

விநாயகரின் உருவம் எப்படி இருக்கும் என்று கேட்டால் எல்லோரும் சொல்லிவிடுவார்கள்; ஆனால், ஆப்பிரிக்காக் கண்டம் எப்படியிருக்கும் என்று கேட்டால் தெரியாது. அதற்கு, இம்மாதிரிப் படிப்பகங்களில், ஓய்வு நேரத்தில் உலகத்தை—உலகத்தின் உண்மையை—அதன் வரலாற்றை, அங்கு வாழ்ந்த உத்தமர்களை, உயர் வாழ்வு கொடுத்த உண்மை விஞ்ஞானிகளை, புலவர்களை நாம் உணர்ந்து கொள்ள வேண்டும்.

இங்கு, கம்பனையும், திருஞான சம்பந்தரையும், காரைக்கால் அம்மையாரையும் சில காலத்திற்கு நிறுத்தி வைத்து, நாம் வெளிநாட்டு வரலாற்றை அறிந்து கொண்டால்தான் இன்னும் 10 ஆண்டுகளிலாவது நம் நாடு முன்னேற முடியும்.

இத்தகைய அறிவுப் பிரசாரங்களை இளைஞர்கள் இம்மாதிரி படிப்பகத்தின் மூலம் செய்துவர வேண்டும்.

அநீதி, அக்கிரமம் எங்கு நடந்தாலும் இளைஞர்கள் அவைகளை எதிர்த்துப் போராட வேண்டும். இது விஷயத்தில் கட்சி மனப்பான்மையின்றி எல்லோரும் செயல்பட வேண்டும்.

பாண்டியன் பகுத்தறிவுப் படிப்பகம், மக்களிடையே இன்னும் அதிகத் தொடர்பு கொண்டு, நல்ல நிலைமைகளை அவர்களுக்கு எடுத்துச் சொல்லி அறிவுத் தொண்டாற்றி வரவேண்டும்."

'ப்ராவ்டா' பேசுகிறது!

கம்யூனிஸ்டு கட்சி இதழான 'ப்ராவ்டா,' இந்தியாவின் போர்ச்சுகீசியர் ஆதிக்கத்தின் உள்ள பகுதிகளில் அமெரிக்கரின் கண்ணோட்டம் பாய்ந்திருக்கிறதென்றும், அவர்கள் இப்பிரச்னையில் கவனம் செலுத்துவதற்குக் காரணம் இந்தியாவுக்கெதிரான நடவடிக்கைகளை தேவைப்படும்போது மேற்கொள்ள இந்தப் பகுதிகளை அமெரிக்க இராணுவ தளங்களாகப் பயன்படுத்த எண்ணுவதே ஆகும் என்றும் குறிப்பிட்டுள்ளதாக அறிய வருகிறது.

நாடெங்கும் திருவள்ளுவர் திருநாள்

சேலத்தில் 4-நாள் விழா

நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள்

சேலம், ஆக. — 28—7—54 மாலை 6 மணிக்கு சேலம் நகராண்மை உயர்நிலைப் பள்ளியில் "திருக்குறள் வாரம்" முதல் நாள் நிகழ்ச்சி சேலம் கல்லூரித் தமிழ் விரிவுரையாளர் திருவாட்டி அ. கு. காமாட்சி அம்மையார் தலைமையில் துவங்கியது.

திரு. அக்காணி பெருமாள் அவையோருக்கு நல்வரவு கூறினார்.

தலைமை முன்னுரையில் தலைவர்கள் திருக்குறள் உவமை நயங்களையும் அவைகளை சிறப்புற அமைத்த ஆசிரியரின் வியத்தகு புலமையினையும் விரிவாகக் கூறினார்.

அடுத்து திரு வை. சுப்பிரமணியம், திருக்குறளை மேனாட்டார் பாராட்டியுள்ள முறையினையும் அத்தகு குறளினை தமிழ் நாட்டார் போக்காது வாளா யிருக்கும் நிலையினையும் எடுத்துக் கூறினார்.

தலைவர் முடிவுரையில் பொதுவுடைமைப் பற்றி மேற்கோள்களுடன் கூறி எல்லோரும் குறளை ஓதவேண்டுமென்றார்.

இரண்டாம் நாள் நிகழ்ச்சி

29—7—54 மாலை 6 மணிக்கு திரு. தி. வை. சொக்கப்பா தலைமையில் நடந்தது.

தலைவர் முன்னுரையில் தமிழர்கள் அனைவரும் தமிழ்மறையாம் திருக்குறளை போற்றவேண்டியதின் அவசியத்தையும் அதற்கென ஓர் நாள் இம்மாநிலம் முழுவதிலும் "திருக்குறள் நாள்" அல்லது "திருவள்ளுவர் நாள்" என பொது விடுமுறையாக அரசினர் விடுமுறை பட்டியலில் சேர்க்கப்படவேண்டுமென்றும் கூறினார்.

அடுத்து திரு. கே. டி. நீலகண்டன் "தள்ளுவர் வகுத்த நெறி" என்பது பற்றி பேசினார்.

தலைவர் முடிவுரையில் திருக்குறள் முதல நூல் என்பதை தமிழறிஞர்களும் சிறப்பாக சில தமிழாசிரியர்களும் மறந்து அதனை கௌடில்யரின் வழி நூல் என்று மயங்குவதும் அவ்வாறே பேசுவதும் மிக வருத்தத்தக்கது என்றும்; திருக்குறள் கிறிஸ்துவுக்கு 300 ஆண்டுகள் முற்பட்டது என்னும் வரலாற்று சான்றுகளுடன் வலியுறுத்திக் கூறினார்.

மூன்றாம் நாள் நிகழ்ச்சி

30—7—54 மாலை 6 மணிக்கு திரு க. நடேச உடையார் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரையில் திருக்குறள் முதல் நூலென்றும், குறளில் காணப்படுவதுபோன்று கௌடில்யரின் அர்த்த சாஸ்திரத்திலும் காணப்படுகிறதென்றும் குறிப்பிட்டார்.

அடுத்து திரு புலவர். ரா. சித்தன் "வள்ளுவரும்—புகழும்" என்ற தலைப்பில் பேசுகையில், தமிழர்கள் அனைவரும் குறள் நெறியினைக் கையாண்டால் புகழடையலாம் என்று குறிப்பிட்டார்.

தலைவர் முடிவுரையில் "இரந்தும் உயிர் வாழ்தல் வேண்டின் பரந்து கெடுக உலகு இயற்றியான்" என்னும் குறளினை நன்கு விளக்கினார்.

நான்காம் நாள் நிகழ்ச்சி

31—7—54 மாலை 6 மணிக்கு திரு. தேவநேயப் பாவாணர் தலைமையில் நடைபெற்றது.

தலைவர் முன்னுரையில் திருக்குறளை எல்லோரும் போற்ற வேண்டுமென்றும் அதன் சிறப்புகளை எல்லோரும் அறியுமாறு செய்யவும் வேண்டுமெனவும் கூறினார்.

அடுத்து திரு. வீ. உலக ஊழியர் 'திருக்குறள் மறை' என்னும் பொருள் பற்றி பேசினார்.

பிறகு தலைவர் கீழ்க்காணும் தீர்மானங்களைப் படித்தார்.

1. இனிமேல் தமிழ் நாட்டில் ஆண்டுதோறும் ஜூலை மாத இறுதியில் கொண்டாடப்பெறும் திருக்குறள் வாரத்தில் ஒரு நாளைப் பொது விடுமுறையாக அளிக்க வேண்டுமென்று சேலம் திருக்குறள் அவை அரசினரை வேண்டிக் கொள்கிறது.

2. இனிமேல் தமிழ் நாட்டில் அன்ன—நீதி மன்றங்களிலெல்லாம் திருக்குறள்புத்தகத்தையே கையிலேந்தி உறுதிமொழி கூறச் சட்டமியற்ற வேண்டுமென்று, அரசினரை வேண்டிக்கொள்கின்றது.

3. இனிமேல் தமிழ் நாட்டில் வள்ளுவர் ஆண்டையே வழக்காற்றுப் படுத்துமாறு, பல அறைப்பட்ட வேதியலாரையும் பொதுவியலாரையும், வேண்டிக் கொள்கின்றது.

4. இனிமேல் தமிழ் நாட்டின் மக்கள் பெயர்களுக்கு முன் திருமான், திருமாள், திருவாட்டி போன்ற அடைகளையே வழங்க வேண்டுமென பல அறைப்பட்ட வேதியலாரையும், பொதுவியலாரையும் கேட்டுக்கொள்கிறது.

திருக்குறள் வார அமைப்பாளர் திரு. அக்காணி பெருமாள் நன்றி கூறினார்.

★

சென்னை

சென்னை மாணவர் மன்றத்தின் சார்பில் 31—7—54 மாலை திருவள்ளுவர் விழா சிறப்பாகக் கொண்டாடப் பெற்றது. டாக்டர் என் தருமாம்பாள் அம்மையார் தலைமை வகித்தார்கள்.

பேராசிரியர் புலவர் மயிலை சிவமுத்து திருவள்ளுவர் விழாவினைக் கொண்டாடுவதற்குச் சூலைத் திங்கள் இறுதிவாரம் பள்ளிகளுக்கு ஏற்றது என்றும், அந்த விழாவைச் சிறந்த முறையில் கொண்டாட வேண்டும் என்றும் கேட்டுக் கொண்டார்.

பிறகு வ. பா. தாமரைக்கண்ணி அம்மையார், குறள், பெண்களை உயர்ந்த நிலையில் வைத்திருப்பதைப் பாராட்டிப் பேசினார்.

கல்லை பாலசுப்பிரமணியம் திருக்குறள் பல சிந்தனை ஊற்றுக்கள் கொண்டது என்று கூறினார்.

அடுத்து திரு ச கணேச பாண்டியன் திருவள்ளுவர் கதை அருவருப்பானது என்று கூறினார் என்பதைக் கொண்டு அவர்தம் உள்ளத் தெளிச்சியையும், பண்பாட்டு முதிர்ச்சியையும் அறிய முடிகிறது, எனக் கூறினார்.

சிறுவை திரு. மோகனசுந்தரம் 'முயற்சி மெய்வருத்தக் கூலி தரும்' என்னும் குறளுண்மையை விளக்கினார். கோ. விஸ்வபதி நன்றி கூறிப் பேசினார்.

★

வண்ணையம்பதி

சென்னை வண்ணையம்பதி தமிழ் இளைஞர் கழகச் சார்பில், 31—7—54 மாலை கழக நிலையத்தில் திரு கோ சுந்தரேசன் தலைமையில் திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டது.

கி மா. மணி பேசும்போது, குறிப்பிடுகையில், திருக்குறளின் பெருமையை நசித்தார் எனும் பிறர் இப்போதுதான் அறிந்து வருகிறார்களென்றும், அதன் பெருமையை அறிய 2,000 ஆண்டுகளாகும் என்றார்.

திரு. பி. கே இளவழகன் பேசுகையில் வள்ளுவர் நாளைக ஒரு நாளை அரசியல் விடுமுறை நாளாக்க வேண்டும் என்றும் அவ்வாறுதான் பாமர மக்களும் வள்ளுவரைப் பற்றியும் குறளின் நெறியை பின்பற்றுவர் என்றும் குறிப்பிட்டார்.

★

ஆள்வார்பேட்டை

சென்னை ஆள்வார்பேட்டை அறிவு வளர்ச்சி மன்றச் சார்பில், 31—7—54ல், வள்ளுவர் திருநாள் தோழர் பச்சையப்பன் தலைமையில் நடைபெற்றது. வள்ளுவரைப் பற்றியும், குறளைப் பற்றியும் தோழர்கள் புருஷோத்தமன், சா. செஞ்செழியன், இரா. அமைமுதன், தி. பலராமன் ஆகியோர் பேசினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

★

அமைந்தகரை

27—7—54 மாலை 6 மணிக்கு சென்னை அமைந்தகரை வரசித்தி விநாயகர் கோவில் தெருவில் திருவள்ளுவர் நினைவு நாள் தோழர் என். ஏ. ரஷீத் தலைமையில் சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. தோழர்கள் க அன்பழகன், ம. கண்ணன், கோ இளவரசு ஆகியோர் சொற்பொழிவாற்றினர். இறுதியில் பல தீர்மானங்கள் நிறைவேற்றப்பட்டன.

★

அயன்புரம்

1-8-54 காலை 9-30 மணிக்கு சென்னை அயன்புரம் வள்ளுவர் படிப்பகத்தில் வள்ளுவர் விழா திரு ஏ நீலகண்டம் தலைமையில் நடைபெற்றது. தோழர்கள்: இ. பக்தவத்சலம், வீரண்ணன், தாமோதரன், மணி, பி முனுசாமி, கணேசன் சொற்பொழிவாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

★

நாகை:

1—8—54 மாலை 6 மணிக்கு நாகை தி மு கழகக் கட்டடத்தில், பகுத்தறிவுப் படிப்பகத்தின் சார்பில், திருவள்ளுவர் திருநாள் நடைபெற்றது. தோழர் என். கல்யாணம் அனைவரையும் வரவேற்றும் வள்ளுவர்விழா நடத்த வேண்டியதின் அவசியத்தை வலியுறுத்திப் பேசினார். திரு. கே. வி ராமன் பகுத்தறிவுப் படிப்பகத்தின் கடந்த கால நிகழ்ச்சி அனைத்தும் கூறியும், புலவர் அம்மைநாதன் அவர்களை தலைமை பேற்று விழாவைச் சிறப்பிக்க கேட்டுக்கொண்டார்.

தலைவர் முன்னுரையில் விழா நடத்த வேண்டியதின் அவசியத்தையும், கடமையையும் வலியுறுத்திக் கூறினார்.

தோழர்கள் கல்யாணம், ஏ எஸ். பாண்டியன், என். பி சதாசிவம்: சொற்பொழிவாற்றினர் தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன.

★

ஆலங்கோட்டை

இவ்வூர் உயர்நிலைத் துவக்கப் பள்ளியில் 31—7—54ல், திருவள்ளுவர் திருநாள் சிறப்புற கொண்டாடப்பட்டது. விழாவிற்கு திரு. கா. கா. வீரையா தலைமை வகித்தார். தோழர்கள் மே. சே. மணியம், மன்னை கோ. இரா. பாலசுப்பிரமணியம், சீ இராதாகிருட்டினன் ஆகியோர் திருவள்ளுவர் பெருமை பற்றி சொற்பெருக்காற்றினர். விழாவில் வந்தோருக்கும், பிள்ளைகட்கும் இனிப்புகள் வழங்கப்பட்டன.

★

ஆரணி

1—8—54 மாலை, பொன்னேரி வட்டம் ஆரணியில் புலவர் கோவிந்தசாமி தலைமையில், திருவள்ளுவர் திருநாள் கொண்டாடப்பட்டது. ...வர் சொற்பொழிவாற்றினர்.

★

கவுந்தப்பாடி

31—7—54ல், இவ்வூர் நாட்டாண்மைக் கழக உயர்நிலைப் பள்ளியில் வள்ளுவர் திருநாளும், இலக்கிய மன்றத் துவக்க விழாவும் திரு சி டி இராஜேஸ்வரன் தலைமையில் நடைபெற்றது. திரு கோபால்சாமி யாவரையும் வரவேற்றுப் பேசினார்.

தலைவர் பேசுகையில், வள்ளுவரை உலகமே மதிக்கிறதென்றும், அவர் கூறியவாறு நடக்க வேண்டுமென்றும் குறிப்பிட்டார்.

திரு. சி. இலக்குவனார் 'குறள் நெறி' என்ற பொருள்பற்றி விரிவுரையாற்றினார்.

★

பெண்ணாகடம்

இவ்வூர் உயர்நிலைப்பள்ளியில் 25—7—54 முதல் 31—7—54 முடிய 'வள்ளுவர் வாரம்' சிறப்பாகக் கொண்டாடப்பட்டது. 28—7—54 விழாவில் சட்டசபை உறுப்பினர் திரு ஏ. கோவிந்தசாமி பங்கெடுத்துக் கொண்டார். 30—7—54-ல் விழா திரு சிவ. பழமலை தலைமையில் நடைபெற்றது. திரு. பெரியண்ணனும், ஆசிரியர் கலியபெருமாளும் சொற்பொழிவாற்றினர். பள்ளி மாணவர்கள் திருக்குறளை ஒதிக்கொண்டு ஊர்வலம் வந்தனர். இவ்வூர் செல்வநிலைக்கிழார் திரு. சிவ பழமலை இனிப்பு வழங்கினார்கள்.

31—7—54ல் அண்மையிலுள்ள பெண்ணாகும்பூர், கிளிமங்கலம், சன்யாசி நல்லூர் ஆகிய கிராமங்களில் விழா மிகச் சிறப்பாகவும், ஆர்வத்துடனும் கொண்டாடப்பட்டது. தலைமை ஆசிரியரும், பிற ஆசிரியர்களும் மூன்று பிரிவாக இக்கிராமங்களுக்கு சென்று விழாக்களில் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினார்கள்.

2—8—54ல் முருகன்குடியில் வள்ளுவர் நாள் கொண்டாடப்பட்டது. உயர்நிலைப்பள்ளி தமிழாசிரியர்களும், அமைச்சர் என். என் இராமசாமி படையாட்சியும் கலந்துகொண்டு சொற்பொழிவாற்றினர்.

★

நகர் கிராமம்:

காரைக்குடி தாலுகா நகர் கிராமத்தில், முன்னேற்ற சங்க இலவச வாசகசாலையின் ஆதரவில் 31—7—54 மாலை 6-30 மணிக்கு வள்ளுவர் வார விழா திரு கே. ஏ. பெரியசாமி தலைமையில் கொண்டாடப்பட்டது. அது சமயம் தமிழ் மக்களுக்கு திருக்குறள் மூலம் அளித்துள்ள பெருமைகளையும் குறள் எல்லா சாதியினராலும், சமயத்தினராலும், நாட்டவர்களாலும் போற்றப்பட்டு வருகிறதென்று தோழர்கள் ஆர். ரெங்கசாமி, இராமகிருஷ்ணன், வை. முத்துசாமி, ரெத்தினசாமி, கே. இராஜரெத்தினம், ஆர். ராமசாமி ஆகியோர் பேசினர்.

★

அமதாபாத்:

29—7—54 மாலை 5 மணிக்கு பழைய முனிசிபல் காலில் இளைஞர் மன்ற சார்பில் வள்ளுவர் ஆண்டு விழா நடைபெற்றது. தோழர் டி கே. தாசன் வரவேற்றார் தோழர் ஆ. செயராமன் தலைமையில் தோழர்கள் ஆர். டி. சலம், க பெருமாள், இரா. வைத்தியலிங்கம், கா. தேவராச, தி. செமோகன் ஆகியோர் குறள் நெறியைப் பற்றி விளக்கவுரையாற்றினர். தீர்மானங்கள் பல நிறைவேற்றப்பட்டன. பின்னர், இனிப்பு வழங்கப்பட்டது.

அமைச்சரிடம் முறையீடு

சின்ன சேலம் வட்டார இளைஞர் கழகச் சார்பில், இவ்வூருக்கு வருகை தந்த அமைச்சர் என் என். ராமசாமி அவர்களிடம் தந்த வேண்டுகோளில், ஊரின் சுகாதாரத்தைப் பாதுகாக்க பஞ்சாயத்து போர்டுக்கு சானிடரி இன்ஸ்பெக்டர் நியமிக்கப்பட வேண்டுமென்றும் சேரி, சக்கிலியர் தெருக்களில் உள்ள கிணறுகளில் மராமத்து செய்து கொடுக்கும்படியும், உடனடியாகப் பிரசவ விடுதி தேவை என்றும், மின்சார வசதி இவ்வாண்டிற்குள் கிடைக்கும்படி நடவடிக்கைகள் எடுக்கும்படி கேட்டுக்கொள்ளப்பட்டது.

அமைச்சர் பதிலளிக்கையில், அரசாங்கம் கழகத்தின் வேண்டுகோளை கவனிக்குமென்று உறுதிமொழி அளித்தார்.

தென்திருப்பேரை, ஜூலை 31— இவ்வூர் தி. மு கழக தோழர் மு ச. மணிமொழியன் காட்டியார் அ. வெயிலு கந்தம்மாள் 30—7—54 இயற்கை யெய்தினமை குறித்து, தி. மு க. அனுதாபம்தெரிவித்துக்கொள்கிறது.

செங்கற்பட்டு மாவட்ட தி.மு.க. 2வது மாநாடுகள்

★

21, 22—8—54 சனி, ஞாயிற்றுக்கிழமைகளில்
காஞ்சிபுரம் கண்ணன் டாக்கீஸ் மைதானத்தில்

21—8—54 சனி: சமூக சீர்திருத்த மாநாடு
தலைவர்: கலைவாணர் என். எஸ். கிருஷ்ணன்
திறப்பாளர்: எம். ஜி. ராமச்சந்திரன்

22—8—54 ஞாயிறு: அரசியல் மாநாடு
தலைவர்: தூத்துக்குடி இரா. சு. தங்கப்பழம்
திறப்பாளர்: திருச்சி எம். எஸ். மணி

பொதுச்செயலாளர், தி. மு. கழகத் தோழர்கள் அனைவரும் பங்கு கொள்வர்

★

இரு நாட்களிலும் இயக்கப் பிரச்சார கலை விருந்துண்டு

செயலாளர்கள்: சே. கோ. பெருமாள், டி. சபாபதி, இரா. வேங்கடேசன்
பொருளாளர்: ஆர். பாபு
வரவேற்புக் குழு தலைவர்: சி. வி. எம். அண்ணாமலை
தொண்டர்ப் படைத் தலைவர்கள்: ஈ. எதிராசன், வகாப், ராசரத்தினம், சிவானந்தம்

உலக அரங்கில்

லண்டன் :

இந்திய, போர்த்துகீசிய அரசுகளிடையே கோவா பிரச்சினையில் எழுந்துள்ள கருத்து வேறுபாடுகளைச் சோதர உணர்வுடன் தீர்த்துவைக்க பிரிட்டன் முயன்று கொண்டிருப்பதாக பிரிட்டிஷ் வெளி விவகார இலாக்கா குறிப்பிட்டதாகத் தெரிகிறது.

* * *

இங்கிலாந்தில் உள்ள போர்த்துகீசிய நாட்டுத் தூதுவரான டான்பெட்ரோ பெரியரா என்பவர் பிரிட்டிஷ் வெளிவிவகார இலாக்காவில் செல்வின் லாயிட் என்பவரைச் சந்தித்து, இந்தியாவில் உள்ள போர்த்துகீசியப் பகுதிகள் பற்றிப் பேசியதாகத் தெரிகிறது.

★

மான்செஸ்டர் :

இங்கிருந்து வெளிவரும் 'மான்செஸ்டர் கார்டியன்' எனும் இதழ், கோவா பிரச்சினையை சமூகமாகத் தீர்ப்பதற்கு வழி, போர்த்துகீசிய ஆதிக்கத்தில் உள்ள இந்தியத் திட்டுகளை அமைதியாக இந்திய அரசாங்கத்திடம் ஒப்புவிப்பதுதான் என்றும் இந்திய தேசிய உணர்விற்கு அன்னியத் திட்டுகள் இந்தியாவினுள் இருப்பது உகந்ததல்ல என்றும் குறிப்பிட்டுள்ளது.

★

ஹாங்காங் :

சீனாவில் உள்ள மிகப் பெரிய நதியான யாங்ட்சி நதியில் பொங்கி வழியும் வெள்ளத்தைக் கட்டுப்படுத்துவதற்கான வேலையில் ஈடுபட்டிருக்கும் ஒரு லட்சம் பேருக்கு ஏராளமான அளவு சாதனங்கள் தொடர்ந்து லாரிகள் மூலமாக அனுப்பப்பட்டு வருகின்றன. இதுவரை யாங்ட்சி நதியின் சரித்திரத்தில் இல்லாத அளவு நீர்மட்டம் 29.05 மீட்டர்கள் உயர்ந்துள்ளது.

★

வாஷிங்டன் :

சென்ற மாதத்தில் ஹைனான் தீவுகளுக்கப்பால் பிரிட்டிஷ் விமான மொன்றை தவறுதலாக சீனா சுட்டு வீழ்த்தியது பற்றி அமெரிக்கா இரண்டாம் முறையாக அனுப்பி இருந்த ஆட்சேபக் குறிப்பை சீனா ஏற்றுக்கொள்ள மறுத்துவிட்டதாகத் தெரிகிறது.

★

லண்டன் :

நான்கு அல்லரசுகளின் மாநாடு ஒன்றைக் கூட்டவேண்டுமென்ற சோவியத் ரஷ்யாவின் சமீபத்திய யோசனையை, பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகள் நிராகரிக்கும் எனத் தெரியவருகிறது.

★

கராச்சி :

பாகிஸ்தான் கவர்னர்-ஜெனரல் குலாம் முகம்மது சவுதி அரேபியாவிற்கு ஹஜ் பயணம் மேற்கொண்டு சென்றுள்ளதால், பாக் பிரதம நீதிபதி முகமது முனீர் தற்காலிக கவர்னர்-ஜெனரலாகப் பதவிப் பிரமாணம் செய்விக்கப்பட்டார்.

* * *

அகதிகள் விடுதி ஒன்றின் உயரமான சுவர் ஒன்று சாய்ந்து அங்கிருந்த அகதிகளில் 15 பேரின் உயிரைக் குடித்துவிட்டது. 50 பேருக்குமேல் படுகாயப்பட்டனர். இந்த நிகழ்ச்சிக்கு முன் பெருத்த மழை பெய்துகொண்டிருந்ததாம்.

* * *

பாகிஸ்தானின் தேசிய கீதமாக நான்கு செய்யுள் கொண்ட பாட்டு ஒன்றை பாக். மந்திரிசபை அங்கீகரித்துள்ளதாகத் தெரிகிறது. பாடலின் அடிகள் இன்னமும் அறிவிக்கப்படவில்லை. இதுவரை வெருநாட்டினர்களுக்கு முன் அங்கீகரிக்கப்பட்ட ஒரு பாடல் தேசிய கீதமாக இசைக்கப்பட்டு வந்ததாயும், இப்போது இசையுடன் கூடிய பாடல் தான் தேசிய கீதமாக ஏற்றுக் கொள்ளப்பட்டிருப்பதாயும் அறிவிக்கப்படுகிறது.

★

காட்மண்டு :

நேபாளத்தில் ஆண்டு தோறும் 38,000 பேர் மலேரியா நோயினால் இறப்பதாயும், 91 இலட்சம் மக்களைக் கொண்ட நேபாளத்தில் வருடந்தோறும் $34\frac{1}{2}$ இலட்சம் பேருக்கு இந்த நோய் பீடிப்பதாகச் செய்தி ஒன்று அதிகார பூர்வமாக வெளியாகியுள்ளது.

★

கொழும்பு :

கனடா நாட்டிற்கு வருகை தர வேண்டும் என்ற அழைப்பை இலங்கைப் பிரதமர் கொத்தலாவலை ஏற்றுக் கொண்டதாக அறிய வருகிறது. அவர் கனடாவில் டிசம்பர் 2-ந் தேதி முதல் 5-ந் தேதி வரை இருப்பாராம்.

நீத்தார் வழிபாடு

★

28—7—54 அன்று, எனது செல்வன் ராமு (அருணாசலம்) சில நாள் உடல் நலிவுக்குப் பின் உயிர் துறந்தான். வருகிற 8—8—54 ஞாயிற்றுக்கிழமை காலை 11 மணி அளவில், நீத்தார் வழிபாடு, காஞ்சிபுரம், சப்பாணி பிள்ளையார் கோயில் தெரு, 26-ம் எண்ணுள்ள எனது இல்லத்தில் நடைபெறும் என்பதைத் தெரிவித்துக்கொள்கிறேன்.

அன்பன்,
காஞ்சி-கல்யாணசுந்தரம்
"நம் நாடு," துணை ஆசிரியர்
காஞ்சிபுரம், 6—8—54

சியாங்-கே-ஷேக் தர்பார்!

பார்மோசாவில் மறைந்திருக்கும் சியாங்-கே-ஷேக்கின் தலைமையின் உள்ள சீன தேசிய அரசாங்கம், 18 வயது முதல் 45 வயது வரை உள்ள எல்லா ஆண்களும் முன்று முதல் ஒரு வருடம் வரை, கட்டாய ராணுவப் பயிற்சி பெற வேண்டுமென உத்தரவிட்டுள்ளாராம்.

வட்டமிடும் கழுகு!

திட்டக் குழு அங்கத்தினரான கே. சி. நியோகி என்பவர், செய்லேயில் நடைபெறும் டமூப்பு நிலக்கரிச் சுரங்க வேலைகள் பற்றித் தெரிந்துகொள்ள சென்றதற்காக, ஆக 9-ந் தேதி சென்னை வருவார் என்றும், நெய்வேலிச் சுரங்கம் களைப் பார்வை இடுவார் எனவும் தெரிகிறது.

ஐரோப்பிய பாதுகாப்பு

ரஷ்யாவின் புது குறிப்பு

ஐரோப்பிய பாதுகாப்பு பற்றி மாநாடு கூட்டுவதற்கான வழிமுறைகளை ஆராயும் பொருட்டு நான்கு வல்லரசுகள் கூடி பேச ஏற்பாடு செய்யவும் பிரிட்டன், பிரான்ஸ், அமெரிக்கா ஆகிய நாடுகளுக்கு ரஷ்யா குறிப்பு அனுப்பியிருக்கிறது.

இக்கூட்டத்தை ஆகஸ்டு அல்லது செப்டம்பரில் நடத்தலாம் என்று ரஷ்யா யோசனை கூறியுள்ளது.

கழகக் கூட்டங்கள்

★

படப்பை

சந்தை மேடு
படப்பை தி. மு. கழக
3-வது ஆண்டு விழா
7—8—54 மாலை $5\frac{1}{2}$ மணிக்கு
தலைவர் :
ஒய். என். இராமலிங்கம்
பேசுவோர் :
சி. என். அண்ணாதுரை
சி. வி. எம். அண்ணாமலை
அ. பொன்னம்பலனார்

★

தாம்பரம்

பெரியார் நகர் துரைசாமி
ரெட்டியார் மார்க்கட் மைதானம்
8—8—54 மாலை 5 மணிக்கு
தலைவர் :
சி. வி. எம். அண்ணாமலை
பேசுவோர் :
சி. என். அண்ணாதுரை
அ. பொன்னம்பலனார்

★

இட்டக்குடி

தி. மா. மு. கழகம்
வாறேலித் திடலில்
8—8—54 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஆ. சாமிக்கண்ணு
பேசுபவர் :
இரா. நெடுஞ்செழியன்

★

நாமக்கல்

திரு. வி. க. பாறையில்
8—8—54 மாலை 6 மணிக்கு
பேசுவோர் :
ஈ. வெ. கி. சம்பத்
கண்ணதாசன்
என். அப்பாவு

★

திருவள்ளூர்

பெரியகுப்பம்
8—8—54 மாலை 6-30 மணிக்கு
தலைவர் : பி. கே. ஜே. நாதன்
பேசுவோர் :
முகவை ஆர். எஸ். பாண்டியன்
வி. எஸ். கோவிந்தராசன்

★

பரமக்குடி

குமரன் படித்துறையில்
8—8—54 மாலை 6 மணிக்கு
தலைவர் : ஏ. செல்லசாமி
பேசுவோர் :
கே. எஸ். சந்தானம்
எம். ஆர். கணேசன்

★

நல்லமங்கலம்

சவுந்திரபாண்டியன் மைதானம்
9—8—54 இரவு 7-30 மணிக்கு
பேசுபவர் :
என். வி. நடராசன்

18-வது வட்ட தி. மு. க. தோழர்கட்கு

8—8—54 ஞாயிறு காலை 9 மணிக்கு கழகப் பணிமனையில் செயற்குழுக் கூட்டம் நடைபெறும். அதுபோது, நான்காம் ஆண்டு விழா நடத்துவது பற்றியும், கழக ஆக்கவேலைகள் குறித்தும் விவாதித்து முடிவு செய்யப்படும்.

சென்னை மாணவர் மன்ற உறுப்பினர் கூட்டம்

சென்னை மாணவர் மன்றத்தின் அமைப்பு விதிகளைக் குறித்து ஆலோசிக்க 8—8—54 ஞாயிறு மாலை 4-மணிக்கு மன்ற நிலையத்தில், மன்ற உறுப்பினர் பொதுக் கூட்டமொன்று நடைபெறும். கூட இயலாத வெளியூர் அன்பர்கள் தம் கருத்துக்களை அஞ்சல் வழி எழுதியனுப்ப வேண்டப்படுகின்றனர்.

'நம் நாடு' வெளியூர் ஏஜண்டுகட்கு

"நம் நாடு" ஜூலை மாதப் பட்டியல்கள் அனுப்பியிருக்கின்றோம். 10—8—54-க்குள் பில் பாக்கித் தொகையையும், பழைய பாக்கியையும் சேர்த்து அனுப்பிவைக்க வேண்டுகின்றோம். முன்பணம் (டெபாசிட்) தொகைக்கு மேல் பாக்கியுள்ள தோழர்கட்கு முன் அறிவிப்பின்றியே 'நம் நாடு' அனுப்புவதை நிறுத்தப்படும் என்பதையும் தெரிவித்துக் கொள்ளுகின்றோம்.

ஏஜண்டு இல்லாத ஊர்கட்கு ஏஜண்டுகள் ('நம் நாடு' விற்பனையாளர்கள்) முன்பணம் கட்டக்கூடியவர்கள் தேவை.

இராயபுரம், சென்னை-13
6—8—54

"நம் நாடு,"
பொறுப்பாளர்

தி.மு.க பொதுச்செயலாளர் அண்ணாதுரை சுற்றுப்பயணம்

★

7—8—54:	படப்பை தி.மு.க ஆண்டு விழா பொதுக் கூட்டம்
8—8—54:	தாம்பரம் தி.மு.க பொதுக் கூட்டம்
16—8—54:	சென்னை, சூளை திருமணம்
21, 22—8—54:	காஞ்சீபுரம்: செங்கற்பட்டு தி. மு. கழக மாநாடுகள்

சின்னசேலம் ஊர் நல இளைஞர் கழக துவக்க விழா

★

8—8—54-ந் தேதி ஞாயிறு மாலை 4 மணிக்கு திரு. வி. க. இடலிலிருந்து ஊர்வலம் ஆரம்பம்; மாலை 6 மணிக்கு பொதுக் கூட்டம்; திரு பி. இரத்தினசாமி தலைமை வகிப்பார். திரு. டி. என். குப்புசாமி கழகத்தைத் துவக்கிவைப்பார். பிரமுகர்கள் பலர் பேசுவர்.

சொற்பயிற்சிக் கூட்டம்

★

சென்னை 53-வது வட்ட தி. மு. கழக பணிமனையில் 7—8—54 சனி இரவு $7\frac{1}{2}$ மணிக்கு தோழர் பாண்டியன் தலைமையில் "இன்றைய நிலை" எனும் பொருளில் சொற்பயிற்சி நடைபெறும்.

ரூ. 10 இலட்சம் விரயமா ?

கவர்னர் செய்யும் மகத்தான காரியம்!

கவர்னர் சம்பளத்தைக் குறைக்க வேண்டும் என்று கூறுபவர்களுக்கு சரியான பதில் சொல்லாமல் செய்து காட்டிவிட்டார், கவர்னர், ஸ்ரீ பிரகாசா!

மக்களின் பாதுகாவலராக தான் பெற்றுக் கொள்ளும் பெரும் பணத்திற்கு சனிக்கிழமையன்று அவர் மிக பொறுப்பும், அவசியமுமான வேலை ஒன்றைச் செய்தார்.

சென்னை செம்பியம் லக்ஷ்மி அம்மன் தேவஸ்தானத்தில் நடைபெற்ற கந்தபுராண பூர்த்தி விழாவிற்கு தலைமை வகித்தார்!

தலைமை வகித்ததோடு அல்லாமல், அறிவு வளரும் வகையில், வடநாட்டின் முருகன் பிரம்மச்சாரி என்பதையும், விநாயகர்தான் மணமான கடவுள் என்பதையும் விளக்கி சொற்பொழிவாற்றினார்.

கவர்னர் அவர்களின் இந்த மகத்தான ஆராய்ச்சிக்கும், யாராலும் செய்ய முடியாத இந்த மகத்தான சாதனைக்கும், இப்போது அவருக்கு அளிக்கப்படும் பெரும் தொகை போதுமா?

சர்க்கரை உற்பத்தி ஆலோசனைக் குழு

டில்லியில் கூடுமாம்!

நாட்டில் சர்க்கரை உற்பத்தியைப் பெருக்கும் பொருட்டு ஆகஸ்டு 9-ந் தேதியன்று புது டில்லியில் சர்க்கரை உற்பத்தித் தொழிலுக்கான வளர்ச்சிக் குழுவின் முதல் கூட்டம் நடைபெறும்.

அதுபோது, தற்போதுள்ள சர்க்கரை ஆலைகளின் வேலையை ஆராய்வதற்காகவும், தகுதியற்ற இடங்களில் அமைக்கப்பட்ட ஆலைகளை வேறு தகுந்த இடங்களுக்கு மாற்றுவது பற்றி ஒரு திட்டத்தைத் தயாரிக்க தொழில் நுட்பக் குழு ஒன்றை ஏற்படுத்துவது பற்றியும் அக்கூட்டத்தில் விவாதிக்கப்படும்.

இந்தக் குழுவின் முதல் கூட்டத்தை மத்திய உணவு விவசாய அமைச்சர் திரு ரபி அகமத் கித்வாய் ஆரம்பித்து வைப்பார்.

பல ஆண்டுகளாக மூடிக் கிடக்கும் 16 சர்க்கரை ஆலைகளின் தற்போதைய நிலைமையை ஆராய்ந்து மீண்டும் அதில் உற்பத்தி துவங்குவது சாத்தியமா என்பதை குழு கண்டறியும்.

வெள்ளைச் சர்க்கரையின் உபயோகம் அதிகரித்து வருவதை உத்தேசித்து அதன் உற்பத்திக்கான குறிக்கோள் அளவை திருத்தி அமைப்பது பற்றியும் அதற்கான புதிய ஆலைகளைத் துவங்கி நடத்துவது பற்றியும் குழு ஆராயும்.

இந்தூர் கலவரம்

இதுவரை இறந்தவர்கள் ஒன்பது பேர்!

கல்லூரி மாணவர்கள், ஓய்வு பெற்ற 'பிரின்சிபால்' ஒருவரை மீண்டும் சேர்த்துக்கொள்ள வேண்டும் என்பதற்காகச் செய்த கிளர்ச்சியை அடக்க போலீசார் துப்பாக்கிப் பிரயோகம் செய்தனர் என்ற செய்தி வெளியாகியதல்லவா? அந்தத் துப்பாக்கிப் பிரயோகத்தில் காயம் பட்ட ஒருவர் இன்று மருத்துவ மனையில் இறந்தார். அவரையும் சேர்த்து மொத்தம் பலியானவர்கள் ஒன்பது பேர் எனத் தெரிகிறது.

குவாடிமாலாவில் அமைதி நிலவுகிறது

குவாடிமாலா சர்க்காரை எதிர்த்து இராணுவத்தினர் செய்த கலகம் அடங்கிவிட்டதென்றும், கலகக்காரர்கள் சரணடைந்துவிட்டனர் என்றும், தற்போது குவாடிமாலாவில் அமைதி நிலவுகிறது என்றும் தெரிகிறது.

கலகத்திற்கு யார் காரணம் என்பதுபற்றி விசாரணை நடைபெறுகிறது.

விரைவில் சுதந்திரப் படைகள் கலைக்கப்படும் என்று தெரிகிறது.

இராயபுரம் ஆண்டர்சன் தெரு [illegible] நம் நாடு அச்சகத்தில் அச்சிட்டு [illegible] வெளியிடப்படுகிறது. ஆசிரியர் : சி. என். அண்ணாதுரை [illegible]